விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 138 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 23 வெள்ளிக்கிழமை (06.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## நாடு முழுவதும் இன்று
# ஹர்த்தால்



- 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஆதரவு
- நாடு முற்றாக ஸ்தம்பிக்கும்

*(கொழும்பு)* ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி இன்று நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

*சகல பகுதிகளிலும் கடைகளை மூடி ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்குமாறு அனைவரிடமும் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

இ.போ.ச பேருந்துகள்
## வழமைபோன்று சேவையில் ஈடுபடும்

(கொழும்பு)
அனைத்து இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளும் இன்று வழமை போன்று இயங்கும். என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி 15

## எரிபொருளுக்கு இன்று முதல் கட்டுப்பாடு

(கொழும்பு)
எரிபொருள் வழங்குவதில் இன்று முதல் மீண்டும் வரையறைகள் விதிக்கப்படவுள்ளன.

இதன்படி, உந்துருளிகளுக்கு 2,000 ரூபாய்க்கும் முச்சக்கரவண்டிகளுக்கு 3,000 ரூபாய்க்கும் சிற்றூர்ந்து, மகிழுந்து மற்றும் ஜீப் ரக வாக 15

பாராளுமன்ற வீதியில்
## பல்கலை மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்
பொலிஸார் கண்ணீர்ப்புகை தாக்குதல்



(கொழும்பு)
பாராளுமன்ற நுழைவு வீதியில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல் கலைக் கழக 15

## பப்ஜி விளையாடுவதில் மூழ்கியிருந்த குடும்பஸ்தர் விபரீத முடிவெடுத்ததில் மரணம்
கடந்த 2 வாரத்தில் யாழில் இரண்டாவது சம்பவம்

(யாழ்ப்பாணம்)
தொலைபேசியில் பப்ஜி விளையாட்டில் மூழ்கிப் போயிருந்த குடும்பத் தலைவர், விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 2 வாரங்களுக்குள் இரண்டாவது நபர் தொலைபேசியில் இணைய வழி போர் விளையாட்டில் ஈடுபட்டு உயிரை 15

முல்லைத்தீவில்
## ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை கிராம அலுவலர் பிரிவின் தீர்த்தக்கரை கொட்டுருட்டி குளத்தில் அழு 15

புதிய பிரதி சபாநாயகராக
## ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் தெரிவு



(கொழும்பு)
புதிய பிரதி சபாநாயகராக கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் தெரிவு 15

## அஜித் நிவாட்டின் பயணத் தடை மேலும் நீடிப்பு

(கொழும்பு)
முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை எதிர்வரும் 23ஆம் திகதி வரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவரை 15



## நெருக்கடிக்கு தீர்வு காண அனைவரும் ஒன்றிணைந்து கலந்துரையாட வேண்டும்
ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)
நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வுகாண அனைவரும் இணைந்து கலந்துரையாடவேண்டும். பிளவுகளைவிட ஒன்றிணைந்து செயற்படுவதே இன்றைய முக்கிய தேவையாக உள்ளது.

அத்துடன் வரவு-செலவு திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவையற்ற செலவுகளை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 15

## எரிபொருள் விலை அதிகரிக்கப்படலாம்?

(கொழும்பு)
நாட்டில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

கடந்த மாதம் 18ஆம் திகதி எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டபோதிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நட்டத்தைச் சந்தித்து வருகின்றது என மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன. விஜேசேகர தெரிவித்துள்ளார்.

விலைகள் அதிகரித்துள்ள போதிலும் டீசல் மற்றும் பெற்றோல் ஆகியவை நட்டத்திலேயே விற்பனை செய்யப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யும் குறைவான விலையிலேயே விற்பனை செய்யப்படுவதாக அவர் கூறினார்.

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக நட்டம் அதிகரித்து வருவதாகவும், ஏப்ரல் 15

## எரிபொருட்களுக்கு விலைச்சூத்திரம்
சபையில் அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)
எரிபொருளுக்கான வெளிப்படையான விலைச் சூத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று வியாழக் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **உஷாநந்தினி வாகீசன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

## தனுக்கோடி குணரத்தினம்

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4293)

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.**

# போராட்டத்திற்கு பயந்து எத்தனை நாட்கள் பதுங்கு குழிகளுக்குள் பதுங்குவது

## சபையில் ஹக்கீம் கேள்வி

(கொழும்பு)

காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்படும் போராட்டத்தின் சத்தம் கேட்காமல் எத்தனை நாட்களுக்கு பதுங்கு குழிக்குள் இருக்கமுடியும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட கேள்வியை எழுப்பியுள்ளார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நீதி இல்லாத நாட்டில் நீதியமைச்சராகவும் நிதியில்லாத நாட்டில் நிதியமைச்சராகவும் அலி சப்ரி செயற்படுகிறார்.

ஏற்கனவே எதிர்க்கட்சி கூறிய விடயங்களையே தற்போது அலி சப்ரி கூறுவதாக குறிப்பிட்டார்.

அவர், நாட்டின் பிரச்சினைக்கு தீர்வை அறிவிக்காமல், தொடர்ந்தும் வாக்குமூலத்தை வழங்கி வருவதாகவும் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஒரு மாதத்திற்குள் தீர்வு கிடைக்கும் என வோஷிங்டனில் இருந்து காணொலி வாயிலாக உரையாற்றியிருந்த அலி சப்ரி தெரிவித்திருந்தார். ஆனால் நாடு திரும்பிய நிலையில் அவர் தற்போது தனது சுருதியை மாற்றி வேறு கதையை கூறுவது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **சு. அமுதசுரபி** அவர்களின் பாசமிகு தாயார்

## அப்புக்குட்டி கனகம்மா

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4290)

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.**

# நல்லூரைப் போன்று தமிழகத்தில் ஆலயங்கள் நடாத்த வேண்டும்

## அண்ணாமலை தெரிவிப்பு

(சென்னை)

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைப்போல் தமிழகத்தில் உள்ள ஆலயங்களை நடாத்தவேண்டும் என்று பா.ஜ.க வின் தமிழக தலைவர் அண்ணாமலை தமிழகத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அவர், இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்கள் உட்பட பல்வேறு இடங்களுக்கு விஜயங் களை மேற்கொண்டிருந்தார்.

அவ்வகையில் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று தரிசனம் மேற்கொண்டு ஆலய நடைமுறைகளை நேரில் கண்டுள்ளார். இந்நிலையில் தமிழகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் 13 நூற்றாண்டு பழமை வாய்ந்த கோயிலாகும். இவ்வாலயமானது தனி ஒரு அறங்காவலரால் நடத்தப்படுகிறது. அங்கிருந்த அர்ச்சகர்கள் தட்டில் காசு கொடுத்து வாங்கவில்லை. அர்ச்சனைக்கு ஒரு ரூபாய் மட்டும்தான். உண்டியலில் மட்டும்தான் பணம் போட முடியும்.

VIP அல்லது Non VIP என்று எதுவும் இல்லை. எல்லோருக்கும் ஒரே வரிசை தான். தமிழகத்திலும் அப்படி ஒரு சட்டம் கொண்டு வர முடியுமா என்று கேள்வி எழுப்பினார். (ம-7)

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. **ஸ்ரனிஸ் ரஜீவ்குமார்** அவர்களின் பாசமிகு தந்தையார்

## கணபதி நாகமுத்து

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4289)

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.**

# ஏல விற்பனை

**யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பின் பின்னராக பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

காலம் : 25.05.2022 புதன் காலை 10.00 மணி

இடம் : பாடசாலை வளவு

**பொருள் விபரம்**


- கேக் றே - 01
- போட்டோக் கொப்பி இயந்திரம் (Canon) - 01
- Bat Senior - 01
- Bat Junior - 01

(11284)

அதிபர்

# மரண அறிவித்தல்

மண்ணுலகு 14 - 08 - 1945



விண்ணுலகு 04 - 05 - 2022

## நாகமுத்து இரத்தினசிங்கம்

**( உரிமையாளர் - குமார் அரைக்கும் ஆலை சித்தங்கேணி, பண்டத்தரிப்பு )**

முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (04.05.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பொன்னம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகனும் யெகதீஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் ஆனந்தி (லண்டன்), நந்தகுமார் (குமார் அரைக்கும் ஆலை - சித்தங்கேணி), ஜீவகுமார் (நியூ குமார் அரைக்கும் ஆலை - பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தகுமார் (லண்டன்), சுமதி, மேனகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஜிந், மிதுஷன், அர்விந், வர்ஷனா, யனோஜன், சாருஜன், ஷாத்மி ஆகியோரின் நேசமுள்ள பேரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனும் சந்திரபாலன், சிவராசா, காலஞ்சென்ற நடராசா, யெயராசசிங்கம் (கனடா), இராசேஸ்வரி (நீர்கொழும்பு), யோகேஸ்வரி (நல்லூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.05.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.** (11281) **தகவல் - குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **இ.சுகந்தினி** அவர்களின் பாசமிகு தாயார்

## சரோஜா சற்குணசர்மா

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4292)

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.**

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **ர.சுஜாத்தா** அவர்களின் பாசமிகு தாயார்

## கந்தசாமி கமலாதேவி

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு நாட்களுக்குள் பதவி விலகாவிட்டால்

# தொடர் பணிப் பகிஷ்கரிப்பு

## காலக்கெடு விதித்தன தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி இன்று வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.**

ஹர்த்தாலின் பின்னர் அரசாங்கத்திற்கு 4 நாட்கள் கால அவகாசம் வழங்குவதாகவும், அதன் பின்னரும் பதவி விலக வில்லை எனில் 11 ஆம் திகதி முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. ( நி-6)

## டீசல் விநியோகம் தாமதமாகும்

### அரசாங்கம் அறிவிப்பு


(கொழும்பு)

டீசல் விநியோகத்தில் சற்று தாமதம் ஏற்படலாம் என வலு சக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பெற்றோல் விநியோகம் மூன்று நாட்களுக்குள் சீராகும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி-6)

## தொடரும் அரசிற்கெதிரான போராட்டங்கள்



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக காலி முகத்திடலில் "கோட்டா கோ கம" ஆர்ப்பாட்டக்களத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் 27 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தற்போதைய அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (நி-6)

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை சந்தித்த கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள்

(கொழும்பு)

கோட்டா கோ கம போராட்டக்களத்தில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவை சந்தித்துள்ளது.

இந்த சந்திப்பில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடியதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு எந்த வகையான நடவடிக்கை அல்லது தலையீட்டை எடுக்கலாம் என்பது குறித்து இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கவலை வெளியிட்டனர்.

தற்போதைய நிலைமை தொடர்பாக மக்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை தலையிடுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்ததாக பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (நி-6)

## அனைத்து நாடகங்களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது

### பாராளுமன்றில் சாணக்கியன் சீற்றம்

(கொழும்பு)



பாராளுமன்றில் நடத்தப்படும் நாடகங்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பாராளுமன்றில் 65 பேர் மட்டுமே மக்களுக்காக உள்ளனர். 148 பேர் ராஜபக்ஷக்களுடனேயே தற்போதும் உள்ளனர்.

ஏனென்றால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை தெரிவு செய்வார்களென நினைக்கவில்லை.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவிற்கு வாக்களித்து அவரை பிரதி சபாநாயகராக தெரிவு செய்த 148 பேரும் தற்போதும் ராஜபக்ஷக்களுடனேயே இருக்கின்றனர்.

எனவே அவரை எதிர்த்து போட்டியிட்ட இம்தியாஸ் பாக்கிர் மார்கருக்கு வாக்களித்த 65 பேர் மட்டுமே மக்கள் பக்கம் உள்ளனர்.

பாராளுமன்றத்தில் என்ன நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டாலும் இங்குள்ள நாடகக்காரர்கள், பொய்யர்கள் அதற்கு எதிராகவே வாக்களிப்பார்கள். ஏனென்றால் அவர்களுக்கு ராஜபக்ஷக்களை காப்பாற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-6)

## வாக்கெடுப்பில் அம்பலமான போலி வேடங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பின் மூலம் பலரின் வேடங்கள் வெளியாகின என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பிரதி சபாநாயராக தெரிவு செய்யப்பட்ட பின்னரே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

மொட்டு கட்சியின் ஆதரவு ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டமையை அடுத்தே தாம் தமது முடிவை மாற்றிக்கொண்டதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்த நிலையில் அரசாங்க கட்சியின் கைப்பொம்மையாக ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய செயற்படுகிறார் என்பது இன்று வெளியானது என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார். (நி-6)

## ஆளுங்கட்சி ஆதரவளித்தாலும் சுயாதீனமாகவே செயற்படுவேன்

### சபையில் பிரதி சபாநாயகர் உறுதி

(கொழும்பு)

"எனக்கு ஆதரவாக ஆளுங்கட்சி வாக்களித்துள்ளது. எனினும், சுயாதீனமாகச் செயற்படும் எமது கட்சியின் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) முடிவு மாறாது.

இதில் உறுதியாக இருக்கின்றோம்" என புதிய பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தனக்கு வாக்களித்த உறுப்பினர்களுக்கு நன்றி கூறிய அவர், மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

எதிரணிகளின் பலத்தைக் காண்பிக்க இருந்த வாய்ப்பை, எதிரணிகள் தவறவிட்டுவிட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

## பாராளுமன்றைச் சுற்றி இரும்பு வேலி



(கொழும்பு)

பாராளுமன்றச் சூழலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் திரளக்கூடும் என்ற அச்ச நிலை காரணமாக அந்தப் பகுதியைச் சுற்றி இரவோடிரவாக இரும்புக் கம்பிகளால் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்ப்புகள் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் காரணமாகவே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA
## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING
### Diploma in Professional English

Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from the eligible candidates to follow the above course conducted by Department of English Language Teaching (DELT), Faculty of Arts, University of Jaffna.

**PROGRAMME OBJECTIVES**

This course has been designed to:

- Equip professionals and students with English language proficiency to fulfill their day-to-day professional and higher educational requirements.
- Broaden the language skills with advanced proficiency in English language structure, technical writing, advanced reading skill, business communication and presentation skills to perform confidently in any practical situation that requires a higher degree of fluency, accuracy, efficiency and effectiveness.
- Enhance adequate proficiency level in English language to meet the global and national demands in their respective fields.
- Develop Basic Interpersonal Communicative Skills (BICS) and abilities in English and make them conversant in the language.
- Promote all the basic language skills: reading, listening, writing and speaking.

**DURATION**

- The duration of the course is one year (which consists of two semesters).
- Classes will be held at weekends only.

**ENTRY REQUIREMENTS**

- Applicants must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream in one sitting and a pass in English at G.C.E A/L or a credit pass in G.C.E O/L.

**SELECTION CRITERIA**

- A candidate must sit for a written examinationto check the ability in basic reading and writing skills.The duration of the examination is one hour.
- The candidates will be called for an interview based on the marks scored in the written examination to assess the basic oral proficiency in English.
- Based on the overall performances, 50 candidates will be selected at a time with a reserve list.

**COURSE FEE**

| | |
|---|---|
| Application Form | Rs 500.00 |
| Registration Fee | Rs 750.00 |
| Library Deposit (Refundable) | Rs 750.00 |
| Library Usage | Rs 1000.00 |
| Course Fee | Rs 40,000.00 |
| Total | Rs 43, 000.00 |

**INSTRUCTIONS**

- Application form could be obtained from the Centre for Open and Distance Learning, University of Jaffna during 9.00am to 4.00pm on weekdays.

Or

- Application form can be downloaded from website (www. codl.jfn.ac.lk)(However, payment slip for 500/= should be attached to the application)
- Duly filled application should accompany the payment slip for a sum of 500/= payable at any branch of the People's Bank to the Bursar **(Acc.No.-890022300001093)**. Keep a photocopy of the slip with you.
- Applications should be sent under registered cover to the Deputy Registrar, **Centre for Open and Distance Learning, University of Jaffna, Thirunelvely** on or before 18th May 2022 indicating **"Diploma in Professional English"** on the left hand corner of the envelope.

05.05.2022 (C-4288) **Registrar, University of Jaffna.**


# ஹயிட்ஸ் பிரிமியர் லீக் யூட் கிங்ஸ் அணி சம்பியன்




ஹயிட்ஸ் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை புனித அந் தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

குறித்த போட்டியில் நடப்பு சம்பியனான ஹயிட்ஸ் சிற்றி கப்பிட்டல் அணியை எதிர்த்து அறிமுக அணியான யூட் கிங்ஸ் லைவன் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹயிட்ஸ் சிற்றி கப்பிட்டல் அணித் தலைவர் களத்தடுப்பை தேர்வு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய யூட் கிங்ஸ் அணி வீரர்கள் ஹயிட்ஸ் சிற்றி கப்பிட்டல் அணி பந்து வீச்சாளர்களை துவம்சம் செய்தனர்.

யூட் கிங்ஸ் வீரர் சுலக்ஸன் மைதா னத்தில் சகல திசைகளிலும் சிக்சர்கள். பவுண்டரிகளாக தெறிக்க விட்டார்.

10 ஓவர்கள் நிறைவில் யூட் கிங்ஸ் அணி 7 விக்கெட் இழப்புக்கு 106 ஓட்டங்களை எடுத்தது.

107 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை துரத்திய ஹயி ட்ஸ் சிற்றி கப்பிட்டல் அணி வீரர்க ளான குமரன், அன்ரனி ஆகியோரின் அதிரடி ஆட்டத்தில் அணி இலக்கை துரத்தியது.

ஆனாலும் சீரான வேகத்தில் விக் கெட்டுக்கள் சரிக்கப்பட்டதால் இறுதியில் ஹயிட்ஸ் சிற்றி கப்பிட்டல் அணி 10 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்ட ங்களை மட்டுமே பெற்றது.

இதன் மூலம் 11 ஓட்டங்களால் யூட் கிங்ஸ் அணி வெற்றிபெற்று 2022 ஹயி ட்ஸ் பிரீமியர் லீக் சம்பியனானது.

சம்பியன் அணியான யூட் கிங்ஸ் அணிக்கு 100,000/= பணப்பரிசிலும் சம்பியன் கிண்ணமும் இரண்டாவது இடம் பெற்ற ஹயிட்ஸ் சிற்றி கப்பி ட்டல் அணிக்கு 50,000 /= பணப்பரிசிலும் வழங்கப்பட் டது. போட்டியின் ஆட்ட நாய கனாக யூட் தெரிவு செய்யப் பட்டார்.

தொடரின் சிறந்த துடுப் பாட்ட வீரராக காண்டீபனும் தொடரின் சிறந்த பந்து வீச்சா ளராக சுலக்சனும் தொடர் நாய கனாக வசிக்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(4-6-33)

# தாச்சிப்போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2022 ஆம் ஆண்டு வெள்ளி விழா போட்டி நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறவு ள்ளது என யாழ்.மாவட்ட தாச்சி சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் அறிவித்துள்ளார். (4-6)





பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்கள், பெண்களிற்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறை சென்தோமஸ் அணி இரு பிரிவிலும் சம்பியன் கிண் ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை சென்தோமஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

(படங்கள்:-கனகராஜா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நெருக்கடியால் மாணவர் வருகை வீழ்ச்சி

## இலங்கை ஆசிரியர் சங்கம்

**(கொழும்பு)**

**நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பேருந்து சேவைகள் குறைக்கப்பட்டு பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதன் காரணமாக மாணவர்களின் வருகை வெகுவாக குறைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக, பேருந்து சேவைகள் திறம்படச் செயற்படவில்லை, மேலும் பேருந்து கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் மாணவர்களின் பாடசாலை வருகை வெகுவாக குறைந்துள்ளது, வாரத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை மட்டுமே மாணவர்கள் பாடசாலை வருகின்றனர்" எனத் தெரிவித்தார். (நி-6)

## காட்டுயானைகளால் தென்னை மரங்கள் அழிப்பு




(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை கலவரத்திடல் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 3 மூன்று காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதியில் புகுந்து பயன் தரக்கூடிய நிலையில் இருந்த 28 தென்னை மரங்களையும் மற்றும் அயல் காணியில் இருந்த 15 தென்னங்கன்றுகளையும் முற்று முழுதாக அழித்துள்ளன.

இப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து எமது பாதுகாப்பு, வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-316-315)

## மன்னாரில் மலேரியா விழிப்புணர்வு ஊர்வலம்




(மன்னார்)

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் மலேரியா தடை இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில்,மலேரியா விழிப்புணர்வு நடைபவனி நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் ஆரம்பமானது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையில் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது. குறித்த ஊர்வலத்தில் ,மருத்துவர்கள்,சுகாதார மருத்துவ அதிகாரிகள், மருத்துவமனை பணியாளர்கள், பாடசாலை மாண வர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மலேரியா தொற்று தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டனர். (4-6-285)

## இராசிபலன்

**06.05.2022**
**சித்திரை 23, வெள்ளிக்கிழமை**
**பஞ்சமி முற்பகல் 10.47 மணிவரை**
**திருவாதிரை காலை 7.50 மணிவரை**

**சுபநேரம்-5.56-7.26 மணிவரை**
**இராகு காலம்- 10.26-11.56 மணிவரை**
**சஷ்டி விரதம்**
**சந்திராஷ்டமம்- கேட்டை**

**வளவன்**

**மேஷம்:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**துலாம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**மகரம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், பாக்கிகள் வசூலாகலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசனசுகமுண்டு.

**ரிஷபம்:** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கிச் செல்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகமான நாள்.

**சிம்மம்:** வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பொன்னான நாள்.

**விருச்சிகம்:** சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**கும்பம்:** பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று இடம் பெறலாம்.

**கன்னி:** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், கனவு பலிதமுண்டு, செய் தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்.டு.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்:** எதிர் பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**அபாயம் இல்லாமல் அபாயத்தை தாண்ட முடியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு சென்றடைந்தார் ஆளுநர் ஜீவன் தியாகராஜா

## வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடினார்



(அராலி)

இந்தியா சென்ற வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று முன்தினம் புதன் கிழமை ஆந்திரா மற்றும் தெலுங்கானா தொழில்நுட்ப வல்லுநர்களை தமிழ்நாட்டில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது வடக்கு அபிவிருத்தியை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பிலும் அனுபவங்களை பகிர்வது தொடர்பில் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் கலந்துரையாடினார்.

வடக்கில் இறால் வளர்ப்பு, மீன்பிடி பண்ணைப் பொருளாதாரம், ரயில்வே, மீள் புதுப்பிக்க சக்தித்திட்டம் மற்றும் நிதி பெறும்முறைமை தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தில் முட்டை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் ஊக்குவித்தல் தொடர்பில் ஆளுநர் தனது கருத்துக்களை முன்வைத்ததுடன் போக்குவரத்துத் துறைகளான கப்பல் சேவை மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பில் தனது கருத்துக்களை முன்வைத்திருந்தார். (4-6-104)

# மதுபானசாலை கொலை வழக்குடன் தொடர்புடைய இருவர் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வல்லை பகுதியில் அமைந்துள்ள மதுபான சாலையில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் இருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் வல்லை பகுதியில் அமைந்துள்ள மதுபான நிலையத்தில் கடந்த 3ஆம் திகதி இரவு இரு இளைஞர்கள் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் போத்தல் குத்தில் முடிவடைந்ததில் திக்கம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் நால்வரை அடையாளம் கண்டிருந்தனர். அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் அல்வாய் பகுதியைச் சேர்ந்த இருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட இருவர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-6-33)

# வடக்கு கடற்றொழிலாளர் இணையம் போராட்டத்திற்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் காலிமுகத்திடலில் தற்போதைய அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறு கூறி முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு தனது ஆதரவினை வழங்குவதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்டனிஜேசுதாசன் தெரிவித்தார். வடமாகாண கடற்றொழிலாளர் இணையமும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் ஒன்றிணைந்து நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிகையில், தற்போது நாடு பூராகவும் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் வெற்றி பெற்று ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் தற்பொழுது அரசாங்கத்தில் பாராளுமன்றத்தில் உள்ளோர் யாரும் மீண்டும் அமையவுள்ள அரசாங்கத்தினுள் உள்வாங்கப்படக் கூடாது. புத்திஜீவிகள் மற்றும் சமூக நலன் சார்ந்தோர் மாத்திரம் எதிர்வரும் அரசில் உள்வாங்கப்பட வேண்டும்.

அத்தோடு எல்லா இனங்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சகல மத அடையாளத்தையும் பாதுகாக்கக்கூடிய ஒரு அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும். எனவே பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய அன்றாடம் தொழிலுக்குச் சென்று உழைக்கும் மக்கள் கடும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள் அவ்வாறான மக்களுக்கான ஒரு தீர்வினை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (4-6-33)

# ஈஸ்வரம்மா தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தால் ஈஸ்வரம்மா தின நிகழ்வுகள் இன்று மற்றும் நாளை மறுதினம் மேற்படி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (4-6)

# அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

சித்தர்கள் வரிசையில் இடம் பிடித்த சரவணச் சாமியாரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வந்த குப்பிழான் வடக்கு சிவகாமி அம்பாள் ஆலயம் (சமாதி கோயில்) வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய அலங்கார உற்சவ நாட்களில் தினமும் முற்பகல் 10 மணிக்கு அன்னைக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதியம் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

அலங்கார உற்சவத்தின் பத்தாம் நாளான எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பாளுக்கு விசேடமாக 108 சங்காபிஷேகம் இடம்பெறும் எனவும் மேற்படி ஆலய தர்மகர்த்தா திருமதி செ.தாந்திமதி தெரிவித்துள்ளார். (4-6-18)

# வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இல் கடமையாற்றும் அலுவலகர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை 2018 (I) 2022 ஆனது எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும். இதற்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுச் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்து எதிர்வரும் 11 ஆம் திகதி க்கு முன்னர் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் 021-2219939 என்ற தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளுமாறு பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (4-6)

# சாவகச்சேரியில் விபத்து தம்பதியினர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம் பெற்ற விபத்தில் கணவன்-மனைவி ஆகியோர் காய மடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முச்சக்கர வண்டியும்-மோட்டார் சைக்கிளும் ஒன்றோடு ஒன்று மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மட்டுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த 61 மற்றும் 63 வயதான கணவன்-மனைவி ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (4-6-30)

# சிறுபோக வெங்காயச் செய்கை யாழில் ஆரம்பம்

(குப்பிளான்)

யாழ்.வலிகாமத்தின் பல பகுதிகளிலும் தற்போது சிறுபோக வெங்காயச் செய்கை ஆரம்பமாகியுள்ளது.

வடமராட்சியில் விதை வெங்காயம் தற்போது ஒரு அந்தர் 20 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கடும் மழையால் வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டமையே விலை அதிகரிப்பிற்கான காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, எதிர்வரும் நாட்களில் விதை வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்கும் எனவும் விவசாயிகள் எதிர்வு கூறியுள்ளனர். (4-6-18)

# குருநகர் இளைஞன் கொலை; பிரதான சந்தேக நபர் சரண்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் இளைஞன் கொலையுடன் தொடர்புடைய முதன்மை சந்தேக நபர் உட்பட மூவர் 8 மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர். மூவரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22ஆம் திகதி பட்டப்பகலில் குருநகரில் வீதியில் வைத்து இளைஞன் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணப் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மை சந்தேக நபர் மற்றும் அவரது சகோதரர்களைத் தேடி தீவகம் உட்பட பல இடங்களில் பொலிஸார் தேடுதல் நடத்தினர். மேலும் பலர் கைது செய்யப்பட்டனர். 9 நாட்களின் பின்னர் 6 பேர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்கள் உட்பட 14 பேர் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். எனினும் முதன்மை சந்தேக நபர்களான சகோதரர்களில் ஒருவர் தலைமறைவாகியிருந்தார்.

8 மாதங்களின் பின் அவர் உள்ளிட்ட மூவர் தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர். சந்தேக நபர்கள் சார்பில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனை நிராகரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, சந்தேக நபர்களை மறுதவணை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (4-6-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

**(கொழும்பு)**

**டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.**

கடந்த வாரத்தில் மட்டும் 1,102 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 17,405 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் இந்த கால ப்பகுதியில் 8,936 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியிருந்ததாகவும், கடந்த வருடத்தை விட இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து ள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்து ள்ளது. (நி-6)

# பிரதி சபாநாயகர் தெரிவின் போது வாக்குச் சீட்டை காட்டிய சஜித்



(கொழும்பு)

பிரதி சபாநாயகரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் போது எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனது வாக்கை பதிவு செய்த பின் வாக்களித்த வாக்குச்சீட்டை எதிர்க்கட்சியினருக்கு காட்சிப்படுத்தினார். இந்நிலையில் ஆளும்தரப்பு எதிர்ப்பினை வெளியிட்டதுடன் சபாநாயகரும் கண்டனம் தெரிவித்தார். (நி-6)

## மூன்று மாதங்களில்

# உணவின்றி மக்கள் இறப்பார்கள்

## அமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)

இன்னும் மூன்று மாதங்கள் கடந்த பின்னர் நாட்டு மக்களில் பலர் இறந்து போவார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

எதிர்வரும் காலங்களில் எரிபொருள் கிடைக்காமல் போகலாம். சமையல் எரிவாயு கிடைக்காமல் போகலாம்.

மின் கட்டணத்தை பெருமளவில் அதிகரிக்க வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. மின் கட்டணம் அதிகரிக்கும் போது குடிநீர்க் கட்டணமும் அதிகரிக்கும். மீண்டும் எரிபொருள், எரிவாயு விலைகளின் அதிகரிப்பை பற்றி பேசுகின்றனர்.

இவ்வாறு அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்து மக்கள் சாப்பிட உணவின்றி இறந்து போகலாம். உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு எதிர்காலத்தில் பலர் இறந்து போகக்கூடும்.

ராஜபக்ஷ அரசாங்கம் கொள்வனவு நடவடிக்கைகளுக்குப் புறம்பாக ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அந்த சந்தர்ப்பத்தில் அவற்றுக்கு எதிராக குரல் கொடுத்து இருந்தால், ஒரு வேளை நான் உயிருடன் இருந்து இருக்க வாய்ப்பிருக்காது.

அதேவேளை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு சர்வகட்சி நிர்வாகம் ஒன்றை உருவாக்குவதே ஒரே தீர்வு.

நாட்டின் உள்நாட்டு நெருக்கடிக்கு தீர்வு காண சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைக்க மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்கவில்லை என்றால், எமது கட்சியும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துடன் எந்த இணக்கப்பாட்டுக்கும் வராது எனவும் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: சூரி 2 செவ் 4 இல்<br>உயரம்: 170 cm<br>தகைமை/தொழில்: ஜேர்மனி பிராஜாவுரிமை<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் உள்நாட்டு விவாகரத்தானவர் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/12588 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 50 சூரி 7 செவ் 9 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: senior Software Engineer (தனியார்)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி மணமகன் இலங்கை, அவுஸ்திரேலியா, லண்டன் போன்ற இடங்களில் இருப்பது விரும்பத்தக்கது<br>தொ.இ: G/12615 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: சூரி 11 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாட்டு மட்டும்<br>தொ.இ: B/12590 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 17 சூரி 4 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும் பட்டதாரி அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12616 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: சூரி 7 செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: சார்தி (சவுதி)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12596 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 23 சூரி 12 செவ் 9 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும் (கொழும்பு விரும்பத்தக்கது)<br>தொ.இ:G/12623 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 31 சூரி 5 செவ் 10 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc in Electric and computer Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி கொழும்பில் வேலை செய்பவர்<br>தொ.இ: B/12599 | பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 66 ½ சூரி, செவ் 7 இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்: BSc (Hons) ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும் ஆசிரியர் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/12625 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொடர்புகளுக்கு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# தேயிலை ஏற்றுமதியில் பாரிய வீழ்ச்சி

## 23 வருடங்களில் இல்லாத மோசமான நிலை

(கொழும்பு)

கடந்த 23 வருடங்களில் முதல் தடவையாக இலங்கையின் முக்கிய தேயிலை ஏற்றுமதி குறைந்துள்ளதாக புள்ளி விபரங்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைனில் போர் மற்றும் உரத்தடை என்பனவே இதற்கான பிரதான காரணங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவின் மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையை தேயிலை கொண்டிருக்கிறது. தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னர் தேயிலை ஏற்றுமதி வருடத்துக்கு 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டியது.

சுங்கத் தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் முதல் காலாண்டு தேயிலை ஏற்றுமதி 63.7 மில்லியன் கிலோவாக சரிந்துள்ளது. இது கடந்த ஆண்டு ஜனவரி-மார்ச் காலகட்டத்தில் 69.8 மில்லியன் கிலோவாக இருந்தது. (நி-6)


# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டு வாழ்த்தும்

திருமதி.

## ஜெயராணி காந்தராஜன்

(ஆசிரியை - ஆரம்பக் கல்வி - SLTS-I)




**சேவை விபரம்**

1. யா/ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை 1990.03.28–1996.04.13
2. மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை 1996.04.14–1999.12.31
3. மு/புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை 2000.01.01–2006.09.14
4. மு/கைவேலி கணேசா வித்தியாசாலை 2006.09.15–2011.09.26
5. யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 2011.09.27–2022.05.06

சின்னஞ்சிறு மழலைகளுக்கு சிட்டாய் பறந்து
எண்ணும் எழுத்தும் புகட்டியவரே
அமைதி எனும் ஆழ்கடலில் முத்துக்குளித்து
முத்தான அறிவுதனை ஊட்டியவரே
விடை கொடுக்க பிள்ளை மனங்களாய் மனங்கள் மறுக்கையில்
காலச்சக்கரத்தின் ஓட்டத்தில் ஓய்வு எம்மை அழைக்கிறது
மணிவிழா நாயகியே போற்றுதற்குரியவரே

வாழ்த்துகின்றோம் நீடித்த ஆயுளுடன் சுக நலத்துடன் சீரும் சிறப்புடனும்
மண்ணில் நல்ல வண்ணம் வாழ
வாழ்க வாழ்கவென மனதார வாழ்த்துகிறோம்.

(G-4285)

ஆசிரியர் பணியாளர் நலன்புரிச்சங்கம்,
யா/தும்பளை சிவபிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 38

# உதவிய மனிதநேயம்



தென் அமெரிக்காவின் மேற்கில் உள்ள பெருநாட்டைச் சேர்ந்த விக்டர் மார்டின் இயல்பிலேயே மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த சிறுவன். அதே நேரம் விக்டர் மார்டின் படிப்பில் படு சுட்டி. இவனது வீட்டில் மின்சார வசதி கூட இல்லாத நிலையில் பாட சாலைக்குப் போய்விட்டு வந்ததும் தெரு விளக்கு வெளிச்சத்தில் அமர்ந்து, படுத்துப் படிப்பதை வழக்கமாக வைத்திருந்தான் மார்ட்டின்.

இதைப் பார்த்து வந்த ஒருவர் அதை காணொளி காட்சியாக எடுத்து, தன் முகநூல் பக்கத்தில் போட, சிறுவனின் படிப்பின் ஆர்வமும், அதற்கு முட்டுக்கட்டை போடும் அவனது குடும்பச் சூழல் குறித்தும் பலருக்கும் தெரிய வர,சமூக வலைத்தளத்தில் அப்படிப் பார்த்துத் தெரிந்துகொண்ட பலரில் ஒருவர் பஹ்ரைனில் வசிக்கும் யாகுப் யூசுப் அகமது என்னும் இளம் கோடீஸ்வரர்.

உடனே அந்தச் சிறுவனுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்ற எண்ணம் மனதில் எழ தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தாரிடம் சொன்னபோது,

எல்லோரும் "இது நடக்கிற காரியமா? உனக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா? பெருநாடு பக்கத்திலா இருக்கிறது?" என்று எள்ளி நகையாடினார்கள்.

யாகுப் யூசுப் அகமது தன் செயலில் உறுதியாக இருந்தார். உடனே மளமளவென அதற்கான காரியங்களில் ஈடுபட்டு பஹ்ரைனில் இருந்து பெருவுக்கு விமானத்தில் புறப்பட்டுச் சென்றடைந்தார். ஒரு வழியாக அந்தச் சிறுவன் விக்டரின் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடித்தார்.

சிறுவனைக் கண்டதுமே கட்டித்தழுவி மகிழ்ச்சி அடைந்தார். உடனே வீட்டுக்கு மின்சார வசதியும் ,கூடவே சிறுவன் பயிலும் பாடசாலை, அவன் வசிக்கும் வீடு இரண்டையும் சீரமைக்க உதவுவதாகச் சொல்லி, அதையும் செய்து கொடுத்தார்.

சிறுவன் கண்ணீர் மல்க நன்றி சொன்னான்.

நம் கண்முன்னே துயரப்படுவோரை பார்க்கும் நாம் கண்டும் காணாமல் உதவி செய்யாமல் நகர்ந்து சென்று கொண்டிருக்கிறோம்...

ஆனால் உலகின் எங்கோ ஒரு மூலையில் விளக்கு வெளிச்சத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த ஒரு சிறுவனுக்கு, விமானத்தில் வந்து உதவியிருக்கிறார்.

இவ்வாறான நல்ல உள்ளம் கொண்ட மனிதர்களால் தான் இந்த உலகம் உயிர்ப்புடன் இருப்பதாக சமூகவலைத்தளங்களில் பலரும் பாராட்டி நெகிழ்ந்து வருகிறார்கள்.

**அன்பு வாசகர்களே!**

**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

# ரஷ்யாவின்
# உலக ந

(மொஸ்கோ)

**ரஷ்யா - உக்ரைன் போர் தொடர்ந் ஏவுகணைகளைக் கொண்டு ரஷ்யா போ பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.**

ரஷ்யாவின் பால்டிக் கடற் பகுதியில் கடந்த ஒரு வாரத் துக்கும் மேலாக ஆயிரக்க ணக்கான ரஷ்ய இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு வந்த னர். உக்ரைனுக்கு ஆதர வான ஐரோப்பிய நாடுகளான போலந்து மற்றும் லிது வேனியா இடையே இந்தக் கடற்பகுதி இருப்பதால், ரஷ் யாவின் இந்தப் படை குவிப்பு பெரும் பரபரப்பை ஏற்படு த்தியது.

லிதுவேனியாவில் இரு ந்துதான் உக்ரைனுக்கு அதிக அளவில் ஆயுதங்கள் செல்

வதா தாக்க பரவி பிரா சூழ் எனி இந்த மாக

# கோடையில் 'டெல்டா' கொ
# மீண்டும் தீவிரமடை

## இஸ்ரேலிய ஆராய்ச்சியாளர்கள்

(ஜெருசலேம்)

இந்த கோடை காலத்தில் டெல்டா உருத்திரிபு கொரோனா மீண்டும் வேக மாகப் பரவி மற்றொரு பாரிய தொற்று நோய் அலை உல கெங்கும் உருவாகலாம் என இது குறித்த ஆய்வு களை மேற்கொண்ட இஸ் ரேலிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒமிக்ரோன் மற்றும் டெல்டா் கொரோனா உருத் திரிபுகள் குறித்து ஆராய்ந்த இஸ்ரேலிய விஞ்ஞானிகள், ஒமிக்ரோன் மற்றும் அதன் துணை திரிபுகள் விரை வில் அழிந்துவிடக் கூடும் எனத் தெரிவித்துள்ளனர்.

எனினும் டெல்டா திரிபு தொடர்ந்து வீரியத்துடன் உள்ளது. இது மீண்டும் உலகெங்கும் தீவிரமாகப் பரவும் ஆபத்து உள்ளது எனவும் அவர்கள் எச்சரி த்துள்ளனர்.

நெ வர எா வெ வி தீ கே கே மற் உ ஆ இ

# மோடி- மெக்ரோன் சந்திப்பு

(பாரிஸ்)

பிரதமர் நரேந்திர மோடி மற் றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானு வேல் மெக்ரோன் ஆகியோர் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

இதன்போது இருதரப்பு உற வுகள் மற்றும் சர்வதேச விவகாரங் கள் குறித்து ஆலோசனை செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் ள்ளது.இது குறித்து வெளியிடப்பட் ள்ள டுவிட்டர் பதிவில் "இரு நண்பர்களின் இந்த சந்திப் இந்தியா-பிரான்ஸ் நட்புக்குப் புதிய ஊக்கமளிக்கும்" என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

(நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ர் தீவிர போர்ப் பயிற்சியால் நாடுகள் பதற்றம்!

டர்ந்து நடைபெற்று வரும் சூழலில், அணு ஆயுத
போர்ப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பது சர்வதேச அளவில்



வதால் அந்நாட்டை ரஷ்யா தாக்கக்கூடும் என தகவல் பரவியது. இதனால் அந்த பிராந்தியத்தில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. எனினும், ரஷ்ய இராணுவம் இந்த தகவலை திட்டவட்டமாக மறுத்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் முதலாக பால்டிக் கடற் பகுதியில் அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் ஏவுகணைகளை கொண்டு ரஷ்யா தீவிர போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகதகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிரிகளின் இராணுவ் நிலைகள், பீரங்கிகள், தளபாடங்கள் ஆகியவற்றை போல வடிவமைக்கப்பட்ட மாதிரிகள் மீது ஏவுகணை தாக்குதலில் ரஷ்ய இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அணு ஆயுதங்கள் இல்லாமல் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ரஷ்யாவின் இந்தப் போர்ப் பயிற்சியால் உக்ரைன் மீது விரைவில் அணு ஆயுத ஏவுகணைகளை கொண்டு ரஷ்யா தாக்குதல் நடத்தலாம் என மேற்கத்தேய ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

எனினும், இந்த செய்திகளுக்கு ரஷ்யா இதுவரை எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ோவிட் அலை டையலாம்

### ள் எச்சரிக்கை

கொவிட்-19 தொற்று நோய் நெருக்கடி முடிவுக்கு வரவில்லை என்பதையே எங்கள் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. மிக விரைவில் மற்றொரு அலை தீவிரமடையலாம். இந்தக் கோடையில் அல்லது கோடையின் இறுதியில் மற்றொரு கொவிட் அலை உருவாகும் என இந்த ஆராய்ச்சியை நடத்திய இஸ்ரேலிய பென்-குரியன் பல்கலைக்கழக பேராசிரியர் ஏரியல் குஷ்மாரோ தெரிவித்தார்.

சர்வதேச அளவில் டெல்டா இன்னும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள் ளது. டெல்டா தற்போதைய அதன் வடிவத்திலேயே மீண்டும் தீவிரமடைய லாம். அல்லது அதன் புதிய துணைத் திரிபுகள் மீண்டும் தீவிரமடையலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாம் கண்ட ஆபத்தான திரிபுகளில் ஒமிக்ரோன் ஆதிக்கம் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் டெல்டா இன்னும் உயிர்ப்புடன் உள்ளது. அது எந்நேரத்திலும் மீண்டும் தீவிரமடையும் ஆபத்து உள்ளது எனவும் அவர் எச்சரித்தார். (நி-6)

## உகண்டாவில் பேருந்து விபத்து

### 7 சிறுவர்கள் உட்பட 20 பேர் உடல் நசுங்கிப்பலி

(கம்பாலா)

உகண்டாவில் நிகழ்ந்த பேருந்து விபத்தில், அதில் பயணம் செய்த 7 சிறார்கள் உட்பட 20 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.



ஆபிரிக்க நாடான உகண்டாவின் போர்ட் போர்ட்டல் நகரில் இருந்து தலைநகர் கம்பாலாவுக்கு ஒரு பேருந்து சென்றது.

மலைப் பாதையில் சென்று கொண்டிருந்த அந்தப் பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஏழு சிறார்கள் உட்பட 20 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (நி-6)

## ன்

செய்யப்
கப்பட்டு
டப்பட்டு
"இரு
சந்திப்பு
ப் புதிய
குறிப்
(நி-6)



## உக்ரைனின் 6 ரயில் நிலையங்களை அழித்துள்ளதாக ரஷ்யா அறிவிப்பு

(மொஸ்கோ)

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள ஆறு ரயில் நிலையங்களை தாக்கியுள்ளதாக ரஷ்யாவின் பாது காப்பு அமைச்சு தெரிவித்து ள்ளது.

மேற்கத்தேய நாடுகள் உக்ரைனியப் படைகளுக்கு ஆயுதங்களை வழங்குவதற்கு குறித்த ரயில் நிலை யங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

அத்துடன் வெடி பொருட்கள், பீரங்கிகளை சேமித்து வைத்திருக்கும் நான்கு டிப்போக்கள் உட்பட மொத்தம் 40 உக்ரைனிய இராணுவ இலக்குகளை தகர்த்தியுள்ளதாகவும் அறிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவு.கடவுச்சீட்டு அலுவலகம் முன் அதிக மக்கள் கூட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்பாக அதிகளவான மக்கள் கூட்டம் கடவுச்சீட்டினை பெறுவதற்கு நேற்று காத்திருந்தனர்.

கணனி கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் செயற்பாடு நேற்று முன்தினம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு பின்னர் வழமைக்கு திரும்பியதாகவும் கொழும்பு தலைமை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்த இந்நிலையில் கணனி கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினரால் இச்செயற்பாடு இடம்பெறாது என வாயிலில் அறிவுறுத்தல் வழங்கியும் மக்கள் அதிகமாக கடவுச்சீட்டினை பெறுவதற்கு காத்திருப்பதனை அவதானிக்க முடிந்தது. (4-6-299)

## சடலங்களை பொறுப்கேற்கவும்

(யாழ்ப்பாணம்)

உரிமை கோரப்படாத நிலையில் பெயர், இடம் தெரியாத ஆண் நோயாளியின் சடலம் ஒன்றும் தொண்டைமானாறைச் சேர்ந்த சிவகுருநாதன் பேரின்பசோதி (வயது-68) மற்றும் முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி. மேரி இராசரத்தினம் (வயது-60) மற்றும் ஆவரங்காலைச் சேர்ந்த வேலன் நடராசா (வயது-77) ஆகியோரது சடலங்கள் யாழ்.போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சடலங்கள் இதுவரையிலும் யாராலும் உரிமை கோரப்படவில்லை.

எனவே குறித்த சடலங்களை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா கேட்டுக் கொண்டுள்ளார். (4-6)

# நூல் வெளியீடு

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட ஜே/63 கொழும்புத்துறை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த எழுத்தாளரும், நூல் விமர்சகருமான அம்பலவாணர் சிறீஸ்கந்தராசாவுக்கு வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் "தராசு முனைகள்" எனும் நூலிற்கான எழுத்தாளருக்கான நிதி உதவி நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ். சுதர்சனால் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை, அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா எழுதிய "தராசு முனைகள்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை சனசமூக நிலைய மண்டபத்தில் யாழ். இலக்கியக் குவியத்தின் அமைப்பாளர் வேலணையூர் தாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6-4-18)



யாழ்.மாவட்டச் செயலகமும், SIYB நிறுவனமும் இணைந்து பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் "தொழில் ஆரம்பித்தலும் மேம்படுத்தலும்" தொடர்பான பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் SIYB நிறுவனத்தைச் சேர்ந்த ஆர்.ஜெயல்ட் அந்தோனி தலைமையில் இடம்பெற்றது.

(படம்:-ரவிசாந்)



யாழ்ப்பாண மாவட்ட செயலகமும், மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் பேரவையும் இணைந்து நடத்திய "மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றுகூடல் விழா" மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் பேரவையின் தலைவர் சுப்பையா பரம்சோதி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை மாவட்டச்செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. (படம்:-ரவிசாந், சிவசாந்தன்)

உ

இத்திமரத்தாள் துணை

## வடமராட்சி வடக்கு தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில்

## வருடாந்த வெளிமடைப் பொங்கல் (வேள்வி)

## 2022-05-06 (வெள்ளிக்கிழமை)

**அறிவித்தலும், ஆசித்தலும், பூஜித்தலும்**

**நாடு மிகவுடையாள் நெல்லண்டை எம் பதியுறைவாள்**
**சாடும் வினைகள் தகர்த்திடும் சால்புடையாள்-பீடுடைய**
**தக்கன் செம்மமதை வேள்விதனை மாய்த்திடும்**
**மிக்க மதிநலத்தாள் மலர்த்தாள் சரண்.**

நிகழும் சுபகிருது வருடம் சித்திரை மாதம் 24 ஆம் நாள் (06.05.2022) வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமை நடைபெற இருக்கும் அனைத்து தெய்வதா கைங்கரியங்களும் பூர்வீகம் பிசகாது நடைபெறத் திருவருள் நிறைய எல்லாம் வல்ல அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனை ஆசி வேண்டியும் அடி பணிந்து வாழ்த்திக்கொண்டும் அனைத்து நிலையடியார்களும் அன்பர்களும், உரித்தாளர்களும் சுகாதார அறிவுறுத்தல்களையும் மிகவும் அனுசரித்து வந்து அனைத்து வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றிக் கொள்க. அன்னையை எல்லோரும் வேண்டிக்கொள்வோம். ஆசித்தலும், பூஜித்தலும் சிறப்புற அன்னை அருள் தருக.



அன்னையின் அடிமை:-
அமரர்.
சைவ சித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ தியாக.சோமஸ்கந்த ராஜாக் குருக்கள்
தும்பளை நெல்லண்டைப்பத்திர காளியம்மன்,
இலட்சுமணந்தோட்டம் வீரமாகாளியம்மன் தேவஸ்தானம்
பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும்.

அன்னையின் திருவடிக்கீழ் என்றும் அடியவன்
சிவஸ்ரீ.இராம.சுந்தரலிங்கக்குருக்கள்
சிவஸ்ரீ.சோம.தனஞ்சயக்குருக்கள்
பிரதம குருவும், பரம்பரை அர்ச்சகரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் 5 மணி நேரம் மின் துண்டிப்பு?

(கொழும்பு)

**நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் கட்டமைப்பு செயலிழந்தமை காரணமாக நாளாந்த மின் துண்டிப்பை 5 மணி நேரமாக அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அணில் ரஞ்சித் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தற்போதைய மின்சார கேள்வியினை முகாமைத்துவம் செய்யக்கூடிய இயலுமை உள்ளதாக குறிப்பிட்டார்.

எனவே தற்போது அமுல்படுத்தப்படும் 3 மணிநேரம் 20 நிமிடங்களுக்கு மேலதிகமாக மின் துண்டிப்பு காலத்தை அதிகரிக்க வேண்டாம் என இலங்கை மின்சார சபைக்கு அறிய ப்படுத்தியுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார். (நி-6)

# பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு நிவர்த்தி செய்ய அனைவரும் ஒன்றிணைவோம்

## பாராளுமன்ற உறுப்பினர் பந்துல

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கையின் கடன் கடிதங்களை வெளிநாடுகள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஒரு துளி எரிபொருளைக் கூட இலங்கைக்கு கொண்டு வர முடியாத நிலை ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதே தவிர, அரசியல் நெருக்கடியல்ல எனவும், அதனை நிவர்த்தி செய்வதற்கு அனைவரும் தேசிய ஒருமித்த கருத்துக்கு வர வேண்டும் எனவும் அவர் நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார். (நி-6)

# குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள சேவை இடைநிறுத்தம்

## மக்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

கொழும்பு - பத்தரமுல்லை பகுதியில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கணனி கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் செயற்பாடு இன்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை கையளிப்பதற்காக தூரப்பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள் குழப்பமடைந்து இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பத்தரமுல்லை பிரதான வீதியினை நேற்றுக் காலை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் பொறளை - கொட்டாவ, பொறளை - கடுவலை வீதிகளில் சுமார் ஒரு மணிநேரம் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவை இடை நிறுத்தப்பட்டதால் திணைக்களத்தின் முன்பக்க கதவின் கண்ணாடியும் உடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# கற்பிட்டி வாகன விபத்தில் ஒருவர் பலி

(புத்தளம்)

புத்தளம் - கற்பிட்டி பிரதான வீதியின் நரக்கள்ளி மாம்புரி பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


கற்பிட்டி பிரதேசத்தில் இருந்து புத்தளம் நோக்கி வந்த ஜீப் ரக வாகனமொன்றுடன் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

புத்தளம் - மணல்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6)

# நான் சிக்கலில் சிக்க ஊழல் அமைச்சர்களே காரணம்

## ஜனாதிபதி தெரிவித்ததாக சிங்கள ஊடகம் தகவல்



(கொழும்பு)

ஊழல் அமைச்சர்களினால் தான் சிக்கலில் சிக்கியுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நல்ல தொலைநோக்குப் பார்வையும், நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டமும் தமக்கு இருந்த போதிலும் நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டதாக அவர் தெரிவித்ததாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (நி-6)

# தொடர்ந்து நட்டமடையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

எரிபொருள் விற்பனையின் மூலம் தொடர்ந்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைந்து வருவதாக பாராளுமன்றில் அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றத்தின் பின்னரும் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துக்கு 1613 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொள்வனவு செய்யும் விலையைக் காட்டிலும் விற்பனை செய்யும் விலையில் நிவாரணம் வழங்கப்படுகின்றமை காரணமாகவே இந்த நட்டம் ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

விலை சீர்திருத்தத்தின் பின்னர் குறிப்பாக மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்று 313 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டியுள்ளபோதும் 84 ரூபாவுக்கே பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (நி-6)

# அதிகரித்த டொலரின் பெறுமதி வீழ்ச்சியடையும் இலங்கை ரூபாய்

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

இந்த நிலையில் இலங்கை மத்திய வங்கியின் உரிமம் பெற்ற தனியார் வங்கிகள் நேற்று நாணய மாற்று வீதங்களை அறிவித்துள்ளது.

இதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 375 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 360 | 350 | 320 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 220 | 250 |
| தக்காளி | 350 | 380 | 340 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 120 | 100 |
| கோவா | 140 | 140 | 140 | 200 |
| கரட் | 180 | 200 | 220 | 250 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 150 | 140 | 150 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 320 | 320 | 320 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 520 | 300 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 140 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 140 | 150 |
| லீக்ஸ் | 150 | 190 | 160 | 200 |
| பீற்றூட் | 180 | 200 | 180 | 250 |
| கறிமிளகாய் | 300 | 300 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 700 | 800 |
| போஞ்சி | 400 | 500 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | 180 |
| கீரை – 1 பிடி | 140 | 110 | 150 | 120 |
| தேசிக்காய் | 600 | 300 | 450 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 55 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 150 |
| வெங்காயப்பூ | — | — | — | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 280 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | — | — | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## சரியாகக் கேட்டான்!



(நேற்றைய தொடர்ச்சி)

அதைக் கேட்ட மன்னன் "அப்படியானால் இப்போதே என் நாட்டிலுள்ள பாம்புகளை எல்லாம் அழிக்க ஏற்பாடு செய்கிறேன். ஒவ்வொரு வீட்டிலும் கீரிப்பிள்ளை வளர்க்க வேண்டும் என்றும் உத்தரவு இடுகிறேன்" என்றான். அப்போது முதல் அரசாங்க வீரர்கள் பாம்புகளைத் தேடிக் கண்டு பிடித்துக் கொல்லலானார்கள்.

இது போதாதென்று வீரசிம்மன் ஒரு கழுகை கிளிப்பிள்ளைளைப் போல வளர்த்து வரலானான். அது எப்போதும் ராணியின் தோளின் மீதே அமர்ந்திருந்தது. இப்படி எல்லா ஏற்பாடுகளையும் செய்ததால் தான் திலோத்தமைக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை. ஒரு பௌர்ணமி இரவில் ராணி மன்னனிடம் "நிலவு பால் போலக் காய்ந்து கொண்டிருக்கிறது. நாம் இருவரும் அரண்மனைப் பூங்காவில் அமர்ந்து சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாமா?" என்று கேட்டாள். வீரசிம்மனும் அதற்கு இணங்கி அவளை அழைத்துக் கொண்டு பூங்காவிற்குச் சென்றான். அப்போது ராணியின் தோளின் மீது இருந்த கழுகு திடீரென அருகிலுள்ள ஒரு மரத்தை நோக்கிப் பாய்ந்து சென்றது. அது அங்கே இருந்த நல்ல பாம்பை தன் கால்களில் பற்றிக் கொண்டு உயரப் பறந்தது. ஆனால் அந்தப் பாம்பு நெளிந்து அதன் பிடியிலிருந்து தப்பி உயரத்தில் இருந்து நேராக ராணியின் தோளின் மீது விழுந்து திலோத்தமையை தீண்டிவிட்டு ஓடியது.

ராணி ஆவென அலறி துடிதுடித்தாள். விஷம் விர்றென்று பரவி வைத்தியர் வருவதற்குள் அளது உயிர் போய் விட்டது. திலோத்தமையின் மரணம் வீரசிம்மனைக் கலங்க வைத்தது. அவன் அவளது அழகிய உடலை எரிக்க விரும்பவில்லை. அதனால் அவன் தன் தந்தையின உடலை பத்திரப்படுத்தி வைத்திருந்தது போல திலோத்தமையின் உடலுக்கும் தைலம் பூசி சந்தனப் பெட்டிக்குள் மூடிப் பாதுகாத்து வந்தான். சில மாதங்கள் கழிந்தன. ஒருநாள் இமய மலையிலிருந்து ஜெயபுரத்துக்கு ஒரு மகான் வந்தார். அவர் கடும் தவம் புரிந்து அரிய சக்தி பெற்றவர்.

இதனை அறிந்த வீரசிம்மன் அவரை தரிசித்து ஏதோ சொல்ல முயன்றான். ஆனால் அவனை இடைமறித்து அவர் " நீ என்ன சொல்லப் போகின்றாய் என்பது எனக்குத் தெரியும்.

மரணம் என்பது இயற்கையின் நியதி. அதை மீறினால் நாசகர மான விளைவுகளே ஏற்படும். நீ உன் தந்தையின் உடலை எரிக்காமல் கோட்டைக்குள் பத்திரப்படுத்தி வைத்தாய். அதனால்தான் உன் குடும்பத்திற்கு ஆபத்து வந்தது.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




"திங்கள் இருபதும் எட்டும் சென்றன; வாலி குகையை விட்டு வெளியேறியபாடில்லை; "மாயாவி அவனைக் கொன்று தின்று முடித்து இருப்பான்" என்ற முடிவுக்கு வந்தோம்; என்னுடைய அமைச்சர் என்னை நாட்டாட்சியை ஏற்குமாறு வேண்டினர்; எனினும் நான் அதற்கு இசையவில்லை; பிலத்துள் யானும் நுழைந்து அசுரனை அழித்து வருவதாய்க் கூறிச் செயற்பட்டேன்; அமைச்சர் என்னைத் தடுத்து நிறுத்தினர்; "கடமையை விட்டு மடமையாய் நடப்பது தகாது" என்று அறிவித்தனர்; நாட்டுக்கு நல்லரசு தேவை என்பதை வற்புறுத்தினர்; வாலி வரமாட்டான்; வந்தாலும், விபரம் சொல்லி அவன் மன்னிப்பைப் பெற முடியும்" என்று அறிவுரை கூறினர். வேறு வழியில்லாமல் கோல் ஏந்தும் வேந்தனாய் மாறினேன்; ஆட்சி பீடத்தில் அமர்ந்தேன்; மாயாவி வெளியே வராதபடி அப்பிலத்துள் வழியைக் கற்கள் கொண்டு கதவிட்டேன்; எதிர் பார்க்கவில்லை; வாலி மாயாவியைக் கொன்று, பிலத்துக் கற்களை விலக்கி வெளியே வந்தான்; "யான் அவனை அடைத்து வைத்து ஆட்சியைப் பற்றினேன்" என்று தவறாய் நினைத்தான்.

"என் தமையன் கால்களில் விழுந்து, தவறு செய்யவில்லை" என்று கூறி மன்னிப்பை வேண்டினேன்; அவன் அதை நம்புவதாய் இல்லை; சினம் அடங்கவில்லை; சீறிப்பாய்ந்தான்; என்னைப் பிடித்து உடலைப் பிளக்க முற்பட்டான்; பிடியினின்று விடுபட்டு உயிருக்கு அஞ்சி ஓடினேன்; ஓடினேன்; ஓடினேன்; வாழ்க்கையின் கரை ஓரத்துக்கே ஓடினேன்; ருசியமுக பருவத்திற்கு ஓடி வந்து, அங்கு அடைக்கலம் பெற்றேன்; வாலி அந்த மலைக்கு வந்தால் அவன் தலை சுக்கு நூறாகச் சிதையும் என்ற சாபம் இருந்தது; அதை அறிந்திருந்ததால் நான் இங்கு சேர்ந்தேன்; சாபம் எனக்குப் பாதுகாப்புத் தந்தது; எனக்குத் துணையாக அனுமனும் வானரத் துணைவரும் வந்து சேர்ந்தனர்" என்ற தன் கதையை எடுத்துச் சொன்னான் சுக்கிரீவன்.

"சுக்கிரீவன் மனைவி உருமை என்பவள் உருவ அழகி, அவளையும் வாலி தன் சுகத்துக்குத் துணையாக்கிக் கொண்டான்; சுக்கிரீவன் நாட்டையும் துறந்தான்; மனைவியையும் இழந்தான்; அகவாழ்வும், ஆட்சியும் அவனை விட்டு நீங்கின; பாதுகாவல் தேடி அவன் இங்கு வந்து சேர்ந்தான்" என்று இக்கதை அங்கு பேசப்பட்டது.

தம்பிக்கு ஆட்சி தந்து, பாசத்தால் உயர்ந்த இராமனால் இந்த நாசத்தை ஏற்க இயலவில்லை; மற்றும் தம்பியின் தாரத்தைக் கவர்ந்து அவளை ஆரத் தழுவிச் செய்த கொடுமையை அவனால் மன்னிக்க இயலவில்லை; தம்பியைக் கொல்ல முயன்றதும் பின் தாரத்தைக் கவ்வியதும் இரக்கமற்ற செயல்கள என்பதை அறிந்து, அவன் சினம் இருமடங்கு ஆகியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவு செலவு பாராதவன் வாழ்வு,
இரவும் பகலும் ஏகாதசி
~ பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உணவுப் பொருள் இல்லாதபோது காசைக் கரைத்தா குடிப்பது!

நாட்டின் அவல நிலை குறித்து நிதிய மைச்சர் அலி சப்ரி தெளிவான உரையொன் றைப் பாராளுமன்றத்தில் ஆற்றியுள்ளார்.

நேற்று முன்தினம் மே 4ஆம் திகதி அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை அரச தரப்பைச் சார்ந்த அமைச்சரின் உரைபோல அமையவில்லை.

மாறாக நாட்டின் அவலநிலை குறித்தும் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் ஆபத்துக் குறித்தும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

நிதியமைச்சராகவும் நீதியமைச்சராகவும் பதவி வகிக்கின்ற அலி சப்ரியின் மேற்போந்த பாராளுமன்ற உரை அரசாங்கத்தைக் காப் பாற்றுவதற்கானதல்ல.

நாட்டு மக்களையும் அரசியல் தரப்புகளை யும் விழிப்படையச் செய்வதற்கான உரை யாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகிக் கொண்டிருக்கின்றது.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதுபற்றி இம்மியும் கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர்.

தவிர, எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற பேரவலத்தையும் அவர்கள் உணராதவர் களாகவும் இருக்கின்றனர்.

இவ்வாறு நிதியமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது, எங் கள் தமிழ் மக்கள் குறித்த ஏக்கமே எம்மிடம் மேலெழுந்தது.

ஆம், நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து எங்களிடம் எந்தப் பயமும் இருப் பதாகத் தெரியவில்லை.

மாறாக, பொருட்களின் அதீத விலையேற் றமும் பொருட் தட்டுப்பாடும் தென்பகுதி மக் களுக்குரியதென்பது போன்ற மாயையில் நாம் இருப்பதாகவே உணர முடிகின்றது.

இந்த நிலைமை பேராபத்தை ஏற்படுத்தக் கூடியது.

எனவே நிதியமைச்சர் அலி சப்ரி முன் வைத்த எச்சரிக்கை தொடர்பில் தமிழ் மக் கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

பொருட்களின் விலையேற்றம் என்பதும் பொருட்தட்டுப்பாடு என்பதும் ஒத்தகருத்து டையவையல்ல.

பொருட் தட்டுப்பாடு ஏற்படுமாயின், எவ் வளவுதான் பணத்தை வைத்திருந்தாலும் குறித்த பொருளை நுகர முடியாமல் போகும்.

ஆக, நாட்டின் பொருளாதாரப் பெருமந்தம் தொடர்பில் நாம் அசமந்தமாக இருக்காமல் ஏற்படப் போகும் பஞ்சத்தை எதிர்கொள்ளத் தயாராகுவோம்.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

வீட்டுத் தோட்டங்களை அமைப்பது முதல் எங்களிடம் இருக்கக்கூடிய, நெற் செய் கள னியிலும் பயிர் செய் காணியிலும் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்வோம்.

எங்கள் உணவுத் தேவையில் நாங்களே தன்னிறைவை ஏற்படுத்துவோம்.

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு பிரதமர் மகிந்த நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிர தமர் மகிந்த ராஜபக்ச நன்றி தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு அரிசி, பால் பவுடர், உயிர் காக் கும் மருந்துகள் உள் ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அனுப்பு வதற்கான நடவடிக்கை களை முதல்வர் மு.க. ஸ்டாலின் மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையில் நில வும் கடுமையான பொரு ளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, அந் நாட்டு மக்களுக்கு அரிசி, பால் பவுடர், உயிர் காக் கும் மருந்துகள் உள் ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படும் என தமி ழக முதல்வர் மு.க.ஸ்டா லின் சட்டசபையில் தனி த்தீர்மானம் கொண்டு வந்தார். அதன்படி பொரு ட்களை அனுப்புவதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கிறார்.

இலங்கை மக்களு க்கு உதவ முன்வந்த தற்காக தமிழக முதல் வருக்கு இலங்கை பிரத மர் மகிந்த ராஜபக்ச நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். அதில், இலங்கைப் பொருளாதார நெருக்க டியை அண்டை நாட்டுப் பிரச்சினையாகப் பார்க் காமல், மனிதாபிமான அடிப்படையில் நோக்கும் தங்களுக்கும், தமிழக அரசுக்கும் இலங்கை மக்கள் சார்பாக நன்றி தெரிவிப்பதாக கூறியுள் ளார். (ம-7)

### இளவாலை பொலிஸ் பிரிவில்
## வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவில் வீதியில் செல் வோரிடம் தங்க நகை களை அபகரித்து வந்த இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அச்சுவேலி பகுதியில் வீடொன்றில் ஒளிந்தி ருந்த போது இருவரும் நேற்று கைது செய்யப் பட்டனர் என்று இள வாலை பொலிஸார் தெரி வித்தனர்.

சண்டிலிப்பாய் மாசி யப்பிட்டி மற்றும் கிளி நொச்சியைச் சேர்ந்த 22 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டனர்.

பெரிய விளான், வட லியடைப்பு பகுதிகளில் அண்மையில் இடம் பெற்ற வழிப்பறிக் கொள் ளைகளுடன் சந்தேக நபர்களுக்கு தொடர்பு என்று பொலிஸார் கூறி னர்.

சந்தேக நபர்களினால் கொள்ளையிட்ட நகை கள் அடகு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள் ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரி சோதகர் தம்மிக்க பத் மராஜ் தலைமையிலான குழுவினரே இந்த கைது நடவடிக்கையை முன் னெடுத்தனர். (ம-7,33,104)

## மூன்று நாட்களுக்கான மின்வெட்டு அறிவிப்பு

(கொழும்பு)

2022 மே மாதம் 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நாளொ ன்றுக்கு மூன்று மணி நேரம் 20 நிமிடங்கள் மின்வெட்டை மேற் கொள்ள பொதுப் பய ன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள் ளது.

அதன்படி, A,B,C,D,E, F,G,H,I,J,K,L,P,Q, R,S,T,U,V,W வலயங் களில் காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை 2 மணி நேரமும், மாலை 5 மணிமுதல் இரவு 9.30 மணி வரை 1 மணி நேரம் 20 நிமிடங்களும் மின்வெட்டு அமுல் படுத்தப்படவுள்ளது.

இதற்கிடையில், CC வலயங்களுக்கு காலை 6 மணி முதல் இரவு 9.20 மணி வரை 3 மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள் ளது. (ம-7)

### சத்துமா விநியோகிக்கும் நிகழ்வின்
## இரண்டாம் கட்டம் இன்று

(குப்பிளான்)

சிவபூமி அறக்கட்ட ளையின் ஏற்பாட்டில் புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெறும் குறைந்த நோயாளருக் கான சத்துமா விநி யோகிக்கும் நிகழ்வின் முதற்கட்டம் நேற்று வியாழக்கிழமை கோண் டாவில் சிவபூமி மனவி ருத்திப் பாடசாலை மண் டபத்தில் ஆரம்பமாகி நிறைவு பெற்றது.

இந் நிலையில் பலர தும் வேண்டுகோளுக்கு இணங்க சத்துமா வழ ங்கும் நிகழ்வின் இரண் டாம் கட்டம் இன்று வெள் ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மேற்படி மண்டபத்தில் இடம் பெற வுள்ளதாக சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலா நிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார். (4-6-18)

### நெல்லியடியில்
## ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பொலி ஸாரால் மேற்கொள்ளப் பட்ட சோதனை நடவடிக் கையில் 35 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் துன் னாலை மேற்கு, தக்கு சம்பாதி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்வதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவ லையடுத்து அவ் வீடு முற்றுகையிடப் பட்ட போது அவ் வீட்டில் இரு ந்த 30 வயதுடைய பெண்ணிடம் இருந்து 35 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் அப் பெண் கைது செய்யப்பட்டுள் ளார். (ம-7,60)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மன வலிமையுடன் எதிர்த்து நிற்றலும் உள்ளுணர்வும்

மன வலிமையுடன் எதிர்த்து நிற்றலும், எதையும் வலியுறுத்திப் பேசலும் உள்ளுணர்வை மறைத்து விடுகின்றன.

பெரும்பாலும் எளிதில் உணர்ச்சிவயப்பட்டவர்கள் மற்றவர்களால் தங்கள் மனம் புண்படுவதைத் தவிர்க்க எதிர்த்து நிற்கும் மனப்பாங்கு உடைய வர்களாயிருக்கிறார்கள்.

இந்த முறையில் தங்களுடைய நுட்பமான உள்ளுணர்வை அவர்கள் காணத் தவறி விடுகிறார்கள்.

உள்ளுணர்வும் உணர்ச்சி வயப் படுதலும் பலதேவை ஆனால் பெரும்பாலும் இந்தப் பண்பு துன்பம் தருகிறது. (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

எண்ணில்லா காலமாக எண்ணில்லாத உடம்பு எடுத்து வருகின்ற நாம் இறைவனை மெய்யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அர்ச்சனை செய்து வழிபட்டால் பிறவி நோய் தீரும்.

நாலு பேர் வழியில் போய் விளங்க வேண்டும். சைவத்துறை நாயன்மார்களான அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் இவர்கள் காட்டிய நெறிகளைக் கடைப்பிடித்து அம் முறைகளைக் கடைப்பிடித்து செல்வது தான் நாலு பேர் போன வழி.

பாலும் தேனும் உடலுக்கு உறுதி. வேலும் மயிலும் உயிருக்கு உறுதி.

எல்லா மொழிகளும் எல்லா வரி வடிவங்க ளும் நான்கே முறையில் அமைந்தவை. ஒன்று சுழி. இரண்டாவது பிறை வடிவம், மூன்றாவது நேர்க்கோடு, நான்காவது குறுக்குக்கோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை


கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 59

| அட்டவணை 3.4: சமயங்கள் அடிப்படையில் சனத்தொகை வீத பரம்பல் - வடமத்திய மாகாணம் | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரதேசம் | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கத்தோலிக்கம் | வேறு |
| அநுராதபுரம் | 90.1 | 0.4 | 8.3 | 0.8 | 0.4 |
| பொலன்னறுவை | 89.7 | 1.7 | 7.5 | 0.8 | 0.3 |
| வடமத்திய மாகாணம் | 90.0 | 0.8 | 8.0 | 0.8 | 0.4 |
| இலங்கை | 70.1 | 12.6 | 9.7 | 6.2 | 1.5 |

### வட மத்திய மாகாணம் நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள்

நிர்வாக மற்றும் உள்ளூராட்சிக்கு ஏற்புடைய வடமத்திய மாகாணத்தின் கட்டமைப்பு அட்டவணை 3.5 இல் காட்டப்பட்டுள்ளது.

| அட்டவணை 3.5: நிர்வாக மற்றும் உள்ளூராட்சி கட்டமைப்பு – வடமத்திய மாகாணம் | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரதேசம் | பிரதேச செயலகப் பிரிவுகள் | கிராம அலுவலர் பிரிவுகள் | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச சபைகள் |
| அநுராதபுரம் | 22 | 694 | 1 | - | 18 |
| பொலன்னறுவை | 7 | 295 | 1 | - | 7 |
| வடமத்திய மாகாணம் | 29 | 989 | 2 | - | 25 |
| இலங்கை | 331 | 14021 | 24 | 41 | 276 |




| அட்டவணை 3.6: தேர்தல் கட்டமைப்பு - 2017– வடமத்திய மாகாணம் | | | |
|---|---|---|---|
| பிரதேசம் . | பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் | வாக்கெடுப்பு பிரிவுகள் | வாக்கெடுப்பு மாவட்டங்கள் |
| அநுராதபுரம் | 672,161 | 7 | 634 |
| பொலன்னறுவை | 321,594 | 3 | 287 |
| வடமத்திய மாகாணம் | 993,755 | 10 | 921 |
| இலங்கை | 15,760,867 | 160 | 12521 |

பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை, வாக்கெடுப்பு பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் என்பன 2017 ஆம் ஆண்டின் போது பின்வருமாறு காணப்பட்டது. அட்டவணை 3.6

### அநுராதபுர மாவட்டம் பற்றிய தகவல்கள்

அநுராதபுர மாவட்டம், 7,179 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புக்கொண்ட வட அகலாங்கு 7°48' மற்றும் 8°55', கிழக்கு நெட்டாங்கு 79°57' மற்றும் 80°59' இடையில் அமையப் பெற்றுள்ளது. மாகாணத்தின் நிலப்பரப்பில் 68.6% வீதத்தைக்கொண்ட மாவட்டத்தின் தரைப் பிரதேசம் 6,664 சதுர கிலோமீற்றரையும், நீர்ப்பரப்பு 515 சதுர கிலோமீற்றரையும் கொண்டதாகும். அநுராதபுர மாவட்டத்தின் மொத்தப் பரப்பில், 7.2 % நீர் நிலைகளைக் கொண்டது.

வடக்கே வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களையும், தெற்கே குருநாகல் மற்றும் மாத்தனை மாவட்டங்களையும், கிழக்கே பொலநறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களையும், மேற்கே புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டமைந்துள்ளது. மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 2,584 சதுர கிலோ மீற்றர் அதாவது 36% 2010 ஆம் ஆண்டளவில் வனப்பிரதேசமாகக் காணப்பட்டது. இந்த மாவட்டம் கடல் மட்டத்திற்கு மேல் + 20 மீற்றர் தொடக்கம் + 768 மீற்றர் வரையில் உயர வேறுபாடுகளை கொண்டுள்ளது.

மற்றும் வீடுகளின் கணக்கெடுப்புக்கமைய (2012) மாவட்டத்தின் சனத்தொகை 860, 575

**அநுராதபுர மாவட்டம் வடக்கே வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களையும், தெற்கே குருநாகல் மற்றும் மாத்தனை மாவட்டங்களையும், கிழக்கே பொலநறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களையும், மேற்கே புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டமைந்துள்ளது. மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 36% 2010 ஆம் ஆண்டளவில் வனப் பிரதேசமாகக் காணப்பட்டது.**

ஆகும். அதன் சன அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 129 நபர்களாகும். 10 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு மட்டம் 95.7 % ஆகும். அநுராதபுரம் இம் மாவட்டத்தின் தலைநகரம் ஆகும்.

இது இலங்கையின் முதலாவது, கி.மு.4 ஆம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்ட தலைநகரம் என்பதோடு, அது 600 ஆண்டுகளுக்கு மேலாக தேசிய தலைநகரமாக இருந்து வந்துள்ளது. இத் தலைநகரம் கொழும்பிலிருந்து 168 கிலோ மீற்றர் நேரடித் தொலைவில் அமையப் பெற்றுள்ளது.

2016 ஆம் ஆண்டில் மாவட்டத்தினுள் இருக்கும் பெருந்தெருக்களின் நீளம் 2259 கிலோமீற்றர் ஆகும். அநுராதபுர மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக விவசாயத் துறையில் (49%) அதைத்தொடர்ந்து சேவைத் துறையில் (35%) மற்றும் கைத்தொழிற் துறையில் (16%) ஆகும்.

### அநுராதபுர மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபட்டுள்ள விதம் அட்டவணை (Q1) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் பௌத்த சிங்களவர்கள் ஆவர்.

அது மொத்த மாவட்ட சனத்தொகையில் 90 % இற்கும் மேற்பட்டதாகும் அடுத்து இலங்கை முஸ்லிம்கள் மற்றும் இஸ்லாமியர்கள் 8 % ஆகும்.

| அட்டவணை(Q1): இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அநுராதபுர மாவட்டம் | | | | | |
|---|---|---|---|---|---|
| இனம் | எண்ணிக்கை | விதம் | மதம் | எண்ணிக்கை | விதம் |
| சிங்களவர் | 782,808 | 91.0 | பௌத்தம் | 775.366 | 90.1 |
| இலங்கைத் தமிழர் | 4.728 | 0.5 | இந்து | 3,231 | 0.4 |
| இந்தியத் தமிழர் | 477 | 0.1 | இஸ்லாம் | 71,493 | 8.3 |
| இலங்கை முஸ்லிம் | 70,692 | 8.2 | உரோமன் கத்தோலிக்கம் | 6,747 | 0.8 |
| வேறு | 1,870 | 0.2 | ஏனைய கிருஸ்தவம் | 3,660 | 0.4 |
| | | | வேறு | 78 | - |
| மொத்தம் | 860,575 | | மொத்தம் | 860,575 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## ஆண் ஒருவரின்...

கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை குளத்தில் சடலம் காணப்பட்டதை அவதானித்த கிராம மக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை மீட்டதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,281)

## வழமைபோன்று...

ரணவக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடியதன் பின்னர் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி இன்றைய தினம் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குமாறு பாதுகாப்பு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி இன்று வழமைபோன்று 5200 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் சுமார் 1,500 தூரப் பேருந்துகள் உள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## எரிபொருளுக்கு...

னங்களுக்கு 8,000 ரூபாய்க்கும் எரிபொருள் வழங்கப்படவுள்ளது.

எனினும், இந்த எரிபொருள் விநியோக கட்டுப்பாடு பேருந்து, பாரவூர்தி மற்றும் வர்த்தக வாகனங்களுக்கு இல்லை எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## அஜித் நிவாட்டின்...

எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் மீண்டும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ரஞ்சித் சியாம்...

செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் வெற்றியடைந்ததையடுத்து, புதிய பிரதி சபாநாயகராக அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த வாக்கெடுப்பில், ரஞ்சித் சியம்பலாபிட்டிய 148 வாக்குகளையும் இம்தியாஸ் பாக்கிர் மார்க்கர் 65 வாக்குகளையும் பெற்றனர்.

3 வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாகப் பதிவு செய்யப்பட்டன.

அதன்படி, 83 மேலதிக வாக்குகளால் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதி சபாநாயகராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், மயந்த திசாநாயக்க, வினோநோகராதலிங்கம், உத்திக பிரேமரத்ன, இம்ரான் மௌரூப், சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ஜோன் செனவிரத்ன ஆகியோர் சமுகமளிக்கவில்லை.

பிரதி சபாநாயகராக செயற்பட்டிருந்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய தனது பதவியிலிருந்து விலகுவதாக தெரிவித்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அண்மையில் அறிவித்திருந்தார். (ம-7)

## பப்ஜி விளையாடு...

மாய்த்துள்ளார்.

"நேற்று முன்தினமிரவு படம் பார்த்துவிட்டு தூக்கத்துக்குச் சென்றோம். காலையில் எழுந்து பார்த்தபோது, கணவர் தூக்கிலிட்டு சடலமாக காணப்பட்டார்.

எப்போதும் பப்ஜி விளையாடுவதில் ஆர்வமாக இருப்பார். வேறு பிரச்சினைகள் அவருக்கு இருக்கவில்லை" என்று மனைவி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கடந்த மாத இறுதியில் இளவாலையைச் சேர்ந்த இளைஞன் இதே போன்ற காரணத்தினால் உயிரை மாய்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-7,33,104)

## எரிபொருட்...

கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுவது இலாபம் ஈட்டுவதற்காக அல்ல என்றும் நட்டத்தைக் குறைப்பதற்காகவே என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பெரும்பாலான எரிபொருளை ரயிலில் கொண்டு செல்லும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், தற்போது இலங்கையில் போதியளவு பெற்றோல் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மூன்று நாட்களில் பெற்றோல் நிலைமையை வழமைக்கு கொண்டுவர முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## ஹர்த்தால்...

சுகாதாரம், போக்குவரத்து, ரயில், மின்சாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகள் உட்பட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழுக்கள் அடங்கிய சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் இன்றைய ஹர்த்தாலில் பங்கேற்க உள்ளன.

அரசாங்கமும் அரச தலைவரும் பொது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இன்றைய தினத்திற்குள் நடவடிக்கை எடுக்கத் தவறினால் எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி முதல் தொடர் ஹர்த்தாலாக மாற்றப்படும் என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் எச்சரித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவாக லொத்தர் வியாபாரிகள் இன்று தமது கடமைகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசிய சுயதொழில் வர்த்தக சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் கிரிஷான் மரம்பகே, நாட்டில் லொத்தர் வியாபாரிகள்/முகவர்கள் லொத்தர் விற்பனையில் ஈடுபடமாட்டார்கள் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, தொடருந்து தொழிற்சங்கம் நேற்று நள்ளிரவு முதல் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

பல தொழிற்சங்கங்கள் இணைந்து இன்று நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவாக நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பேருந்துகளை இயக்குவதில் இருந்து விலகுவதற்கு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கமும் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் தற்போது கடுமையான டீசல் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதனால் பொதுப் போக்குவரத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

வங்கித் துறையுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள், இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரும் ஹர்த்தாலில் பங்கேற்க உள்ளனர்.

அனைத்து மத வழிபாட்டு தலங்களும் காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரை ஒலிபெருக்கி மூலம் பிரார்த்தனைகளை நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஹர்த்தால் மற்றும் ஏனைய பொதுப் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் வன்முறையில் ஈடுபடுவதையோ அல்லது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதையோ தவிர்க்குமாறு தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொண்டுள்ளதுடன், அமைதியான முறையில் தொடருமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ம-7)

## பல்...

மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் பேரணி பத்தரமுல்லை தியத உயன பகுதியில் பொலிஸாரால் வைக்கப்பட்ட வீதித் தடையை அகற்ற முற்பட்டபோது அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை தாக்குதலை மேற்கொண்டனர். (ம-7)

## எரிபொருள்...

18ஆம் திகதி அதிகரிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திற்கு நாளாந்த நட்டம் 1613 மில்லியன் ரூபாயாகும் எனவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித் தார்.

இந்த நிலையில் எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ம-7)

## நெருக்கடிக்கு...

இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் தொடர்பில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடு பாரிய பிரச்சினைக்கு ஆளாகி இருக்கும் நிலையில் இடைக்கால அரசாங்கமா? அல்லது தனியான அரசாங்கத்தை அமைப்பதா? என்பது தொடர்பிலும் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்றும் குரல் எழுப்பப்பட்டு வருகின்றன.

எனினும் இத்தகைய சூழ்நிலையில் தேவையற்ற செலவுகள் நிறுத்தப்பட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றார். (ம-7)


மெகா பவர்
திகதி 05/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1101
E 10 04 09 24 73

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.05.05
சீட்டிழுப்பு இலக்கம் 062
மீனம் 12 15 29 43 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2022/05/05
சீட்டிழுப்பு இலக்கம் 4753
V 2 7 6 4 1 0

தன நிதானய
திகதி -2022.05.05
சீட்டிழுப்பு இலக்கம் -783
D 05 19 61 76

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1730
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022/05/05
தினம் வியாழன்
E 11 14 18 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 59,930,257/-

சனிதா Shanida
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.05.05
சீட்டிழுப்பு இல: 3891
வர்ணம்: சிவப்பு
ரூ. 4,629,260/-
வெற்றி இலக்கங்கள் 19 36 45 74 Q

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,622,079/-
திகதி 2022/05/05
வெற்றி வாரம் 3442
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 34 36 46 54
ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,232,020/-


A 23 09 49 55 68
சீட்டிழுப்பு வாரம் 906
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.05.05 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 235,462,237/-

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1556
சீட்டிழுப்பு திகதி: 2022.05.05
ரூ. 4,268,420/-
10 12 20 67 V


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 - 11 - 1954



மறைவு
03 - 05 - 2022

## கதிரவேலு நடேசு

( ஓய்வுபெற்ற மலேரியா தடைப்பகுதி முன்னைநாள் ஊழியர் - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, கைதடி ஆரம்ப பிரதேச வைத்தியசாலை, இணுவில் ஆதார வைத்தியசாலை )

கைதடி மத்தி குமரநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நடேசு அவர்கள் கடந்த 03.05.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - குழந்தை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பியன் - கதிராசி ஆகியோரின் பாசமிகு மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜீவானந்தன், கிரியா (இத்தாலி), ஜெயாநந்தன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரி, சரஸ்வதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கனகரட்ணம், இலட்சுமி, தெய்வானை, கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம், சிவகுரு, மயில்வாகனம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் சர்வானந்தன் (இத்தாலி) அவர்களின் அன்பு மாமனாரும் அஸ்வின் (இத்தாலி), அச்சிதா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் விக்கினேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதியர்),யோகம், காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற நாகமுத்து ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.05.2022) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4284)

கைதடி மத்தி, குமரநகர்.
077 445 4110
076 324 0430
தகவல் :- குடும்பத்தினர்


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள **மேசன், கூலியாள், பெயின்ரர், தச்சுவேலை** செய்வோர் தேவை. ஒப்பந்த அடிப்படையில் செய்வோர் விரும்பத்தக்கது.

(11290) -077 777 0969

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 55 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A9 வீதியில் இருந்து 150m தூரம்
- லேடன் கொம்பனி பின்புறம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரம்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- நல்ல சூழல்
- 20 அடிப் பாதையுடன்

முன்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 7 இலட்சம்**

பின்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 5 இலட்சம்**

(11292)

077 658 5999, 074 043 6673


### ஹர்த்தாலுக்கு ஆதரவாக துண்டுப்பிரசுரம்

இன்று நடைபெறவிருக்கும் ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி நேற்று யாழ். நகர் பகுதியில் துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் மற்றும் அவரது கட்சியை சேர்ந்தவர்கள் இணைந்து இத்துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கும் யாழ். நகரிற்கு வருகை தந்தவர்களுக்கும் இந்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

(ம-7,33,104)


இயங்காத நிலையில் உள்ள அனைத்துவிதமான தொலைபேசிகளும் கொள்முதல் செய்யப்படும்.

A.R.K MOBILE SHOP
No.62, Hospital Road, Jaffna.
T.P : 071 423 3121
(C-4286)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4270)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777


# மரண அறிவித்தல்



## கதிரவேலு ஆனந்தசோதி

பிறப்பு : 1962.06.01  இறப்பு : 2022.05.04

இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு விவேகானந்தா வீதி, மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஆனந்தசோதி அவர்கள் நேற்று முன்தினம் (04.05.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - அசுபதி தம்பதியரின் அன்பு மகனும் சிற்சபேசன் - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சண்முகேஸ்வரியின் அன்புக் கணவரும் கமலாசினி (உயர் தொழில்நுட்பக் கல்லூரி - மாணவி), காலஞ்சென்ற சஞ்சீவன், சிவதாயினி (மாணவி - யா/ இணுவில் மத்திய கல்லூரி), அருணகிரி (மாணவன் - யா/ இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைஸ்ணவன் (கண்ணா - அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு மாமனாரும் அருட்சோதி (லண்டன்), ஜெகதீஸ்வரி (ரசி), உதயசோதி (சோதி பேக் ஹவுஸ்), புனிதவதி (யசோ-பிரான்ஸ்), அருளேஸ்வரி (சாந்தி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் குமாரசாமி (ஓய்வுபெற்ற வலி.மேற்கு பி.ச), ரஜனி (லண்டன்), விக்கினேஸ்வரி, சிவானந்தம் (பிரான்ஸ்), தயானந்தன் (முகாமைத்துவ உதவியாளர் - வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), உதயகுமாரி (லண்டன்), உதயகுமாரன் (பிரான்ஸ்), ஆறுமுகதாஸ் (அண்ணாத் தொழிலக ஊழியர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் மகேந்திரன் (லண்டன்), பிரேமிலா (பிரான்ஸ்), சசீந்திராதேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் பிரவின், மேவின் (லண்டன்), சேந்தன், கோகிலன், சுதேசன் (லண்டன்), கோவர்த்தனன் (கோபி) ஆகியோரின் சிறியதகப்பனும் அஜித், அஜிந்தா ஆகியோரின் பெரியதகப்பனும் தக்ஷா (தனு), பகுரதன், சாரங்கன், சகாணா (பிரான்ஸ்), சாருஜா, சாஜித்தியா, ஸ்ரீராம், சாய்ராம், அந்துஷா, ஆகாஷ் (பிரான்ஸ்), பவீனா, சுஜீவன், றஜானா, றேத், கரிஸ்னா, கிறிஸ்னி (கனடா), கோசிலா, துஷியந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ஸ்னா, வனஜித், ஆருத்ரன், ஆதித்யன், அபிராமன், இலக்கியா (கனடா), ஆதிரன், மீனாட்சி, சாய்கிறிஸ் (லண்டன்), ஹரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.05.2022) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக' காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (11283)

விவேகானந்தா வீதி, இணுவில் கிழக்கு, மஞ்சத்தடி.
077 921 4110
077 721 4234
தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.